**குண்டசாலை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 31 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 23 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் குண்டசாலை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபை கட்டிட அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 27,205,393 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | நிலையான சொத்து பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலிற்கான வருமானத்தின் பங்களிப்பு கணக்கிற்கிடையில் ரூபா 350,567 ஆன வித்தியாசமானது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (iii) | பல்லேகளே ஜனசவிகம வீட்டு கருத்திட்டம் தொடர்பாக குண்டசாலை பிரதேச சபையிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 1.044 ஹெக்டயர் காணி மற்றும் அளவையிடப்படாத 13 காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (iv) | கடந்த ஆண்டுகளில் காணி ஏலவிற்பனையால் கிடைத்திருந்த ரூபா 2,033,912 ஆன வருமானமொன்று காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (v) | சபைக்கு சொந்தமாகவுள்ள 2 மோடார் வண்டிகள் மற்றும் முன்னைய ஆண்டில் அன்பளிப்பாக கிடைத்த டேலரின் பெறுமதிகயை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (vi) | இறுதி இருப்பினுள் பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 4,837,105 ஆன நீர் வேலைப் பண்டங்களின் இருப்பொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (vii) | மீளாய்வாண்டில் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (viii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய குப்பை வரி வருமானம் ரூபா 1,347,070 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(ஆ) **எதிர்பாராத பொறுப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு எதிராக 22 வெளித் தரப்பினர்கள் வழக்கு தாக்கல் செய்திருந்ததுடன், அது தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்பாராத பொருப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்வதாக அறிவிக்கிறேன். |

(இ) **இனக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத் தொகை ரூபா 298,176,483 ஆன 10 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளில் காட்டப்படும் மீதிகளிற்கிடையில், ரூபா 137,170,814 வேறுபாடு ஆனது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தை கண்டறிந்து கணக்குகளை சீர் செய்ய வேண்டும். | இம் மீதிகளை தீர்ப்பதற்கு 5 பேர்களை கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளதாக அறிவிக்கிறேன். |

(ஈ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதி திகதியன்று கிடைக்க வேண்டிய 3 வகை கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 56,423,330 ஆனது. அவற்றில் ஆண்டு 1 முதல் 5 இற்கு இடைப்பட்ட காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 10,855,650 ஆனதுடன், 5 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 15,285,156 ஆக இருந்தது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இம் மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதி திகதியன்று செலுத்த வேண்டிய 3 வகை கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 7,208,594 ஆனது. அவற்றில் ஆண்டு 1 முதல் 3 வரையான காலத்திற்குரிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 6,253,022 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்த வேண்டிய மீதிகளை உருதி செய்து கொண்டதன் பின்னர் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(உ) **கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகளின்மை**

| | | |
|---|---|---|
| பெறுமதி ரூபா 24,338,396 ஆன 3 கணக்கு விடயங்களிற்குரிய இருப்புப் பதிவேடு, பண்டக கணிப்பீட்டு அறிக்கை, அட்டவனைகள் மற்றும் மறுக்கப்பட்ட காசோலைகளிற்கான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை சமர்பிக்க வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்வதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைதுவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைதுவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) 149 பிரிவு | சுற்றுலா சபையில் பதியப்பட்ட ஓர் ஹோட்டலிலிருந்து 2017 ஏப்ரல் 1 முதல் 2018 | சுற்றுலா சபைக்கு சமர்பிக்கப்படும் கணக்கு | சட்ட நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிக்கை செய்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மார்ச் 31 வரையான காலத்திற்கு 1 சதவீதம் வரையான கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிக்கை தொகுதியினை பெற்று வருமானம் அறவிட வேண்டும். | |
| | (ii) 126(vii)(ஊ)பிரிவு மற்றும் 2016 திசெம்பர் 13 திகதி வெளியிடப்பட்ட வரித்தமானி | வருட ஆரம்பத்தில் விளம்பரப்பலகை தொடர்பான கணிப்பீடொன்று செய்திருக்காததுடன், அனைத்து விளம்பரங்களிற்காகவும் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | வருட ஆரம்பத்தில் கணிப்பீடொன்றை மேற்கொண்டு வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்தாத விளம்பரப்பலகை தொடர்பாக கட்டணம் செலுத்துமாறு அறிவித்திருப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவு | செயலாற்றுகை அறிக்கையொன்று சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயலாற்றுகை அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சமர்பிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 1898 இலக்கம் 09 கொண்ட மாடருப்பாளர் மற்றும் மாடருப்புத் தளம் தொடர்பான சட்டத்தின் 8 பிரிவு | மாடருப்பு தளமொன்றிற்காக வர்த்தமானியில் பிரசுரித்து எதிப்பு கோரப்பட வேண்டிய போதும், அதற்கு முரனாக தவிசாளரின் கையொப்பத்துடன் தற்காலிக அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், சட்ட, விதிகளிற்கிணங்க இவ் வியாபாரத் தளம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரம் வழங்கும் போது சட்ட, விதிகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் 2020 ஜனவரி 28 திகதி தற்காலிகமாக இடை நிருத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கை | | | |
| | (i) 2013 ஜுலை 31 திகதிய 07 ஆம் இலக்க சுற்றறிக்கை | அதிகார எல்லையில் 127 முட்சக்கர வண்டி தரிப்பிடங்களில் 1263 முட்சக்கர வண்டிகள் பதியப்பட்டிருந்த போதும், ஒழுங்காக கட்டணம் அறவிடப்படாததால், ரூபா 276,396 நிலுவை ஆனது. | முச்சக்கர வண்டிகளை ஒழுங்காக கணிப்பீடு செய்து முறையாக கட்டணம் அறவிட வேண்டும். | 2019 மார்ச் 31 திகதியன்று கணிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஓட்டத்தில் இல்லாத முச்சக்கர வண்டிகளை பில்லிடுவதை இடை நிறுத்தியுள்ளதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 2018 ஏப்ரல் 24 திகதிய இலக்கம் 2018/04 கொண்ட சுற்றறிககையின் பந்தி 01 | அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி கெப் வண்டியொன்று ரூபா 314,364 செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தாமதத் தவறின் காரணமாக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள முடியவில்லை என அறவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 17,898,648 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 46,517,379 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 8,006,682 | 29,092,209 | 21,020,016 | 2,887,295 | 9,938,681 | 9,981,743 | 7,094,801 | 7,511,399 |
| (ii) | வாடகை | 8,400,000 | 8,552,745 | 8,026,451 | 901,002 | 6,863,272 | 10,418,822 | 8,449,819 | 17,258,864 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,301,000 | 5,416,000 | 4,551,048 | 864,951 | 2,332,000 | - | 5,816,917 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 745,000 | 624,000 | 345,210 | 440,006 | 6,218,200 | 789,600 | 16,957,085 | 2,400,518 |
| | | 19,452,682 | 43,684,954 | 33,942,725 | 5,093,254 | 25,352,153 | 21,190,165 | 38,318,622 | 27,170,781 |

#### 2.2.2 வாடகை

**கடையறை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மெனிக்ஹின்ன வியாபார கட்டிடத் தொகுதிகளில் 50 கடைகளிலிருந்து மீளாய்வாண்டு இறுதி திகதியன்று ரூபா 887,750 கடை வாடகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை கடையறை வாடகையை அறவிட வேண்டும். | நிலுவை தொகையை செலுத்துவதில்லை எனின் முத்திரையிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.2.3 அனுமதிப்பத்திர கட்டணம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அனுமதிப்பத்திர கட்டண வருமானம் ரூபா 1,265,869 குறைவடைந்திருந்தது. வியாபாரத் தளங்கள் தொடர்பாக சரியான கணிப்பீடொன்றை மேற்கொள்ளாததால் வருமானம் குறைவடைந்திருந்தது. | முறையான கணிப்பீடொன்றை மேற்கொண்டு கட்டணம் அறவிட வேண்டும். | முறையான கணிப்பீடொன்றை மேற்கொண்டு கட்டணம் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.2.4 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையுடன் உடன்படிக்கை செய்த நிறுவனமொன்றிற்கு இயற்கை பசளை விநியோகித்ததில் ரூபா 1,062,380 ஆன தொகை அறவிட வேண்டியதாக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் விடயத்தை சமாதான சபையிற்கு முன்வைத்து அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம் பில்லிடல் மேற்கொள்ளப்படாததால் திசெம்பர் 31 திகதியன்று நிலுவையொன்றை இனங்காண முடியவில்லை. | பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடப்பட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **உப விதிகள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை மேற் கொள்ள உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 19 விடயங்களிற்கு மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு வருமானம் ஈட்டும் சந்தர்பங்களை இனங்கண்டு உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(ஆ) **எதிர்பார்த்த விளைவுகளை (out come) பெற்றுக் கொள்ளாமை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | 2016 ஆண்டில் ரூபா 9,080,564 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பல்லேகலை ரஜரூபசந்தை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது 5 ஆண்டுகளாக விளைவற்று நிலவிது. | எதிர்பார்த்த பலனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் டென்டர் செய்து பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | தேசிய மின்சார சபையினால் வழங்கப்பட்டுள்ள மும்முக விநியோகத்தின் மின்சாரம் சமனாகாத காரணத்தால் மீளாய்வாண்டில் ரூபா 4,536,144 செலவில் நிருவப்பட்ட மின்தூக்கி செலற்று காணப்பட்டது. | மின்தூக்கியை செயற்பாடு நிலைக்கு ஆக்க வேண்டும். | மின்சாரத் தொகுதியின் கொள்ளளவு போதாமையால் மின் கம்பிகளை இட்டு சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (iii) | சபைக்கு சொந்தமான திகன பொது மலசலகூடம் 2017 ஆண்டில் ரூபா 2,000,000 செலவில் பழுதுபார்க்கப்பட்ட போதும், பயன்படுத்தப்படவில்லை. | மலசலகூடத்தை பழுதுபார்த்து பொது மக்கள் நலன்புரியை ஏற்படுத்த வேண்டும். | கழிவு நீர் வடிகால் தொகுதியை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (iv) | சிரிமல்வத்த வீட்டு உத்தேச திட்டத்தில் 9 இலக்க காணித் துண்டை கொள்வனவு செய்ய 2015 ஆண்டில் ரூபா 1,230,910 செலுத்தப்பட்டுள்ள போதும், செலுத்த வேண்டிய எஞ்சிய பணத்தை செலுத்தி காணியை சுவீகரிக்க அல்லது செலுத்திய தொகையை மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | காணியை விலைக்கு வாங்க அல்லது செலுத்திய தொகையை மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

(இ) **செயற்பாடுகளை மேற்கொள்வதன் தாமதம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபையினால் ரூபா 3,475,000 பெறுமதியான 21 வேலைகளை மேற்கொள்வதில் தாமதமொன்று காணப்பட்டது. | அனைத்து கருத்திட்டங்களையும் உரிய காலத்தில் பூர்த்தி செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(ஈ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| குண்டசாலை மற்றும் பாததும்பர பிரதேச சபைகள் ஒன்றினைந்து உக்கலடையும் கழிவுகளிலிருந்து தன்னியக்க காற்று தொழிநுட்ப இயற்கை பசளை உற்பத்தி கருத்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. உக்கலடையா கழிவுளை மீள் சுழற்சிக்கு அனுப்பாது சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சலவைகற் குழிகளில் இட்டு மண் இடப்பட்டு மூடப்பட்டிருந்தது. | இயற்கை பசளை கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கத்தினை அடைந்து கொள்ளல் மற்றும் முறையாக உக்கலடையா கழிவுகளை முகாமை செய்ய வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(உ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை போதியளவு இனங்கண்டிருக்காததுடன், அது தொடர்பாக போதியளவு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரஜரூப சந்தையில் ஆரம்பிக்கப்பட்டிருந்த உள்நாட்டு உணவகத்திலிருந்து எவ்வித வாடகையையும் அறவிட்டிருக்கவில்லை. | சபையிற்கு பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். | இப் பங்குதாரர்களுக்கு உடன்படிக்கை கைசாத்திட வருமாறு அறிவித்த போதும் வரவில்லை என அறிவிக்கிறேன். |
| (ஆ) | பலகொள்ள மொறகஹபிடிய பலநோக்கு கட்டிடத்தில் மற்றும் திகன பலநோக்கு கட்டிட கடையறைகளின் மதிப்பீட்டை செயற்படுத்தாததால் ரூபா 19,080,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன், புதிய மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீட்டு பெறுமதியின் மீது கடையறை வாடகை அறவிடல் மற்றும் புதிய மதிப்பீடும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | புதிய மதிப்பீட்டை பெற்று குத்தகைகாரர்களை தெரிவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் 8 பதிவிகளில் 10 ஊழியர் வெற்றிடங்களும் 1 பதவியில் 1 ஊழியர் மிகையும் ஆனது. | பதவி வெற்றிடங்களை நிரப்ப மற்றும் மிகை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | இடம் மாறிச் சென்ற 5 அலுவலர்களிடமிருந்து ரூபா 927,087 ஆன இடர் கடன் மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. | கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறது. |

**3.4 சொத்துக்கள் முகாமைதுவம்**

**3.4.1 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் பெறப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான திகன மற்றும் மெனிக்ஹின்ன நகரிலுள்ள 2 மலசலகூடங்களை டென்டர் அறிவித்து வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மலசலகூடங்களை டென்டர் அறிவித்து சேவை வழங்கி வருமானம் பெற்றுக் கோள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் | நீர் குழாய் தொகுதியை சீர் செய்து டென்டர் அறிவித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறது. |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 5,369,900 பெறுமதியான 05 வாகனங்கள் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் நிலவின. | பயன்படுத்த முடியுமான சொத்துக்களை பழுதுபார்க்க மற்றும் விளைவற்ற சொத்துக்களை பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாகனங்கள் தொடர்பாக செயற்பாடொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறது. |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் ஆயுர்வேத வைத்தியரிற்கு 2018 ஆண்டினுள் ரூபா 728,256 மற்றும் 2019 ஆண்டினுள் ரூபா 770,472 ஆன சமபளம் வழங்கப்பட்டிருந்த போதும், அவர் எவ்வித கடமையிலும் ஈடுபடாததால் அச் செலவு விளைவற்ற செலவொன்றாக ஆகியிருந்தது. | இவ் வைத்தியரை வேறொரு சபைக்கேனும் இனைத்து சேவையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வைத்தியர் சேவையிற்கு அறிக்கை செய்வதற்காக பல்ளேகுன்னேபான நடமாடும் மத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கிறேன். |

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| CCTV கெமரா தொகுதியொன்றை பொருத்த நிறுவனத்தின் தேவையை இனங்காணாது அளவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு விலை மனு கோர பத்திரிகை அறிவித்தலிற்காக ரூபா 48,606 ஆன தொகை செலவிடப்பட்டுள்ள போதும், குறித்த செயற்பாடு மேற்கொள்ளப்படாததால் சபைக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. | அளவுத் திட்டத்தை தயாரித்து டென்டர் அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கோரப்பட்ட விலை மனுவை தொழிநுட்ப குழு கவனத்தில் கொள்ளாததால் இத் தொழிநுட்ப குழுவினூடாக அளவுத் திட்டத்தை தயாரித்து குறித்த நடவடிக்கையை நிறைவேற்றிக் கொள்ள அனுப்பப்பட்ட போதும், அளவுத்திட்டம் கிடைக்காததால் விலை மனு கோர முடியவில்லை என அறிவிக்கிறேன். |

### 3.7 பெறுகைகள்

#### ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டில் சமுதாய அடிப்படை சங்கங்களின் கொள்ளவு அபிவிருத்தி | கட்டிடம் நிர்மாணிக்கப்படும் | இக் கட்டிட உரிமை பிரதேச செயலாளரிற்கு |

| | | |
|---|---|---|
| வேலைத் திட்டத்தின் கீழ் லுனுகெடியாமடித்த பல நோக்கு கட்டிட அபிவிருத்தியிற்கு ரூபா 1,300,000 தொகை செலவிடப்பட்ட போதும், இந்நிர்மாணத்திற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், கட்டிடத்தின் பின் பகுதி கால்வாய் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததால் மழையினால் கட்டிட அத்திவாரம் கழுவிச் செல்லப்பட்டிருந்தது. | போது திட்டத்தை அங்கீகரித்துக் கொண்டு நிர்மாண வேலைகளை மேற்கொள்ள வேண்டும். | உரித்தாவதுடன், நிர்மாணம் ஆரம்பிக்க முன்னர் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்காததால் அத்திவாரத்தின் குறைபாடுகள் ஆரம்ப நிர்மாணப்பணிகளின் போது பிரதேச செயலகத்தினால் சீர்செய்யப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மாகாண சபையினால் ஏற்பாடு ஒதுக்கப்பட்டதுடன், நிர்மாணம் மாத்திரம் இவ் அலுவலயத்தினால் செய்யப்பட்டதாக அறிவிக்கிறேன். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளக கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| உள்ளக கணக்காய்விற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதும் போதியளவான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கை சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். | ஊழியர் வெற்றிடங்களை நிரப்பிய பின்னர் உள்ளக கணக்காய்வை முறையாக்குவதாக அறிவிக்கிறேன். |